**O.S. 104/2020**

Date: **27.08.2026**

Pw-1- சேவியர்   த/பெ. மலையப்பன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்யப்படுகிறார்**

2) 27.05.2020 ஆம் தேதியில் நான் கல்லிடைக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். கிரைய பத்திரம் யார் சொன்னதன் அடிப்படையில் எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்படுகிறது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அன்றைய தேதியில் என் தகப்பனாருக்கு பண நெருக்கடி அல்லது கடன் வாங்கவேண்டிய நெருக்கடி இருந்ததா? என்றால் கிடையாது. என் தகப்பனாருக்கு இதுவரையிலும் யாரிடமாவது கடன் வாங்கியுள்ளாரா என்றால் எனக்கு தெரிந்தவரையில் கிடையாது. என் அப்பாவுக்கு அம்பாசமுத்திரம் போர்ட் சிட்டி பெனிபிட் பண்ட் நிதி நிறுவனத்தில் கணக்கு இருந்தது என்றால் இல்லை. செபஸ்டியான் நாடார் மகன் மரிய லூயிஸ் யார் என்றால் தெரிந்தவர். நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து 2 வீடுகள் தள்ளி குடியிருக்கிறார். சவுரிமுத்து குமாரர் ஆரோக்கிய கேபிரியல் என் சித்தப்பா பையன் ஆவார். அவருக்கும், எனக்கும் விரோதம் கிடையாது என்றால் இல்லை. செட்டிமேட்டு கிராமம் மலையப்பன் மகன் சேவியர் என்றால் அது என்னைத்தான் குறிக்கும்.

3) என் தகப்பனார் எந்த எண்ணத்தில் 27.05.2020 ஆம் தேதியில் கல்லிடைக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.660/2020 சுப்பிரமணியன் பெயருக்கு பிறப்பித்து கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் என் தகப்பனார் கிரைய தொகை பெற்றாரா என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு பிராது தாக்கல் செய்வதற்கு தகவல் சொன்னது நான்தான் என்றால் என் அப்பாதான் வழக்கு தாக்கல் செய்தார். என் அப்பாதான் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு தாக்கல் செய்தார். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு

என் அப்பா ஏதும் விபரம் என்னிடம் கூறினாரா என்றால் வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் எனக்கு சொன்னார்.

4) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சுப்பிரமணியனுக்கு பத்திரம் எழுதிக்கொடுத்தேன், அவர் தொகை தரவில்லை என்று என்னிடம் சொல்லவில்லை. பிராதில் கூறியுள்ள விபரங்கள் உண்மையானதா என்பது எனக்கு தெரியுமா என்றால் என் அப்பா வழக்கு தாக்கல் செய்திருப்பதாக கூறினார். என் தகப்பனார் இந்த வழக்கு சம்பந்தமாக பிரதிவாதிகள் காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்திருந்தாரா என்றால் கொடுத்திருந்தார். ஆனால் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை . எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் வி.கே.புரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அதற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. காவல் நிலைய புகாருக்கு நான் உடன் சென்றேனா என்றால் இல்லை, நான் போகவில்லை. புகார் கொடுத்ததாக என் அப்பா வழக்கில் சொல்லியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது.

5) காவல் துறையில் ஏதேனும் விசாரணை நடந்ததா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதி, எந்த மாதம், எந்த வருடம் புகார் கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் அப்பா பத்திரம் பிறப்பித்தபிறகு வில்லங்க சான்று போட்டதாக சொல்லப்பட்டுள்ளது, அது எந்த மாதம், எந்த தேதி, எந்த வருடம் என்றால் தெரியாது. அந்த வில்லங்க சான்று என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை, என் அப்பா கைவசம் வைத்திருந்தார். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக சொன்னார். இந்த வழக்கில் பிரதிவாதிகளிடமிருந்து சொத்தை சுவாதீனம் கேட்டு பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் அவ்வாறுதான் பரிகாரம் கேட்டுள்ளேன்.

6) 3 ம் பிரதிவாதி நல்லெண்ண கிரையதாரர் என்றாலும், 1 ம் பிரதிவாதி என் தகப்பனாரிடம் சரியான பிரதிபிரயோஜனத்தின்பேரில்தான் பத்திர விபரங்களை படித்து பார்த்து விபரம் தெரிந்து சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றாலும், கிரைய தொகையை நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றாலும், என் தகப்பனார் இறந்தபிறகு நான்தான் அந்த பணத்தை வாபஸ் பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. தற்போது குடும்ப சொத்து பிரதிவாதிகள் கிரையம் வாங்கிவிட்டதால் பொறாமை கொண்டு என் அப்பாவை மிரட்டி

பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்ய வைத்துள்ளேன் என்றாலும், நான் என் மற்ற சகோதரர்களும் என் அப்பாவை கவனிக்கவில்லை என்றும், அதற்காகத்தான் சொத்தை தனது கடைசி கால செலவுக்காக வாதி மலையப்பன் விற்பனை செய்தார் என்றும், தற்போது என் தகப்பனார் விற்பனை செய்த சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Sd/- சேவியர்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

SARANYA G V

Uploaded on 27.08.2026
Digitally signed by SARANYA G V
Date: 2026.08.27 16:37:00 +0530

கூ.மா.உ.நீ.,

அம்பாசமுத்திரம்.